பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 15 புதன்கிழமை 29.01.2025 | அதிர்வு 181

## மாவையை இன்று நேரில் பார்வையிட்ட சுமந்திரன்

கடும் சுகவீனமுற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் 03▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# அரசியல் இலஞ்சவாதிகள் தமிழினத்தின் துரோகிகள்

## அவர்களுக்கு மக்கள் தக்க பாடம் புகட்ட வேண்டும் என்கிறார் சுமந்திரன்

(எஸ். ரகுதீஸ்)

“அரசியல் இலஞ்சம் பெறுகின்றவர்கள், கட்டாயம் எமது இனத்தைக் காட்டிக் கொடுப்பார்கள். அதில் எந்தவிதமான சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.”

- இவ்வாறு இலங்கைத் தமிழசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில்இன்றுநடைபெற்றசெய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 03▶



## அர்ச்சுனா எம்.பி. கைது!

(எஸ்.நிதர்ஷன், எஸ்.ரகுதீஸ், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இன்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார், சாவகச்சேரியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரத்தில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, யாழ்ப்பாணத்தில் வைத்து விசேட பொலிஸ் குழுவின ரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

அவரை அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# உடுப்பிட்டி மதுபானசாலைக்கு எதிரான வழக்கு மார்ச் 6ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி, உடுப்பிட்டியில் மக்களின் எதிர்ப்பை மீறித் திறக்கப்பட்ட மதுபானசாலைக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதிக்குப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத் தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி, இமையாணன் மேற்கில் புதிதாகத் திறக்கப்பட்ட மதுபானசாலையை அகற்றக் கோரி அப் பகுதியைச் சேர்ந்த 32 பொது அமைப்புக்களால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத் தில் கடந்த வருடம் மே மாதம் 5 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் முன் னிலையில் இன்று புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

இன்று குறுக்கு விசாரணை நிறைவடைந்த நிலையில் எழுத்து மூல சமர்ப்பணத்துக்காக வழக்கு எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது.



## துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த

# மேலும் இரு இந்திய மீனவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மேலும் இரண்டு இந்திய மீனவர்கள் வைத்தியசாலையில் இன்று சேர்க்கப் பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பரப்புக்குள் எல்லை தாண்டியபோது நேற்று அதி காலை 13 இந்திய மீனவர்கள் கடற் படையினரால் கைது செய்யப்பட்டனர். இதன்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டபோதும் எஞ்சிய 11 மீனவர்களும் பொலிஸாரிடம் ஒப்ப டைக்கப்பட்டனர்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட 11 இந்திய மீனவர்களும் காங்கேசன்துறை பொலிஸாரினால் மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

அவர்களில் இருவரில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன என்று கூறி இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

# பொலிஸ் உத்தியோகத்தரை வாகனத்தால் இடித்து வீழ்த்திய மண் கடத்தல்காரர்கள்

(எஸ்.ரகுதீஸ்)

சட்டவிரோதமாக மண் கடத்திய வாகனத்தால் பொலிஸ் உத்தியோகத்தரை இடித்து வீழ்த்தி விட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்ற நிலையிலும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் பொலிஸாரால் மீக்கப்பட்ட சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் வடமராட்சி – வல்லிபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

துன்னாலை – வல்லிபுரம் வீதி ஊடாக மணல் கடத்தி வந்த மகேந்திரா ரக வாகனத்தை பருத்தித்துறை – மருதங்கேணி வீதியில் பொலிஸார் மறித்துள்ளனர்

இதன்போது மண் கடத்தி வந்த வாகனம் வேகத்தைக் குறைத்த போது பொ-லிஸார் ஒருவர் அதை மடக்கிப் பிடிக்க முற்றபட்டபோது மணல் கடத்தி வந்த வாகனம் தாறுமாறாக ஓடியது. பொலிஸ் உத்தியோகத்தர் இடித்து வீழ்த்தப்பட்ட நிலையில் அவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்போது தப்பிச் சென்ற வாகனத்தைப் பருத்தித்துறை பொலிசார் மீட்டு விசாரணைகளை மேற்கொண்டுள்ள-னர்.

# யோஷிதவிடம் இருந்து 5 துப்பாக்கிகள் மீட்பு!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷவிடம் இருந்த ஏழு துப்பாக்கிகளில் ஐந்து துப்பாக்கிகளை பாதுகாப்பு அமைச்சு கைப்பற்றியுள்ளது என்று பாதுகாப்பு செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யா கோத்தா தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு செயலாளர்,

"தனிநபர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காகப் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்படும் துப்பாக்கிகளில் இருந்து 182 துப்பாக்கிகள் மட்டுமே மீளப் பெறப்படவுள்ளன.

யோஷித ராஜபக்ஷவிடம் இருந்து ஐந்து துப்பாக்கிகளைப் பாதுகாப்பு அமைச்சு கைப்பற்றியுள்ளது. அவரிடம் மேலும் இரண்டு துப்பாக்கிகள் இருக்கின்றன." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அரசியல்...**

"மதுபானம் உள்ளிட்ட போதைப் பொருள் பாவனை மூலமாக சமூகச் சீரழிவை ஏற்படுத்துவது தொடர்பில் நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம். இது தொடர்பில் பலவிதமான வேலைத் திட்டங்களைப் பல காலமாகச் செய்து வருகின்றோம்.

அரசியல் இலஞ்சமாக சமூக விரோத செயற்பாட்டுடன் தொடர்புடைய மதுபான சாலைகள் வழங்கப் பட்டமை பிரதான விடயமாகப் பார்க்கப் பட வேண்டும். அதில் தமிழ் அரசியல் வாதிகள் சிலர் சம்பந்தப்பட்டிருந்தார்கள், தாமாகவே தேர்தல் அரசியலிலிருந்து விலகினார்கள். ஆனால், பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றார்கள்.

ஆகவே, இது தொடர்பாக மக்கள் தமது கரிசனையைச் செலுத்தவேண்டும். அரசியல் இலஞ்சம் பெறுகின்றவர்கள், கட்டாயம் எமது இனத்தைக் காட்டிக் கொடுப்பார்கள். அதில் எந்தவித மான சந்தேகமும் இருக்கத் தேவையில்லை.

தங்களுடைய சொந்த நலன்களுக்காகச் சொத்துக்களைக் குவிப்பதற்காகப் பலர் இவ்வாறு செயற்படுகின்றார்கள்.

அவர்களை அடையாளம் கண்டு மக்கள் சரியான விதத்தில் செயற்பட வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை." – என்றார்

---

**மாவையை...**

மாவை சேனாதிராஜாவைக் கட்சியின் பேச்சாளர் எம் ஏ சுமந்திரன் இன்று காலை வைத்தியசாலை சென்று பார்த்தார்.

அதன் பின்னர் மாவை சேனாதி ராஜாவின் மகன் கலையமுதனுடன் நீண்ட நேரம் சுமந்திரன் உரையாடினார்.

அதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தியுடன் மேலதிக சிகிச்சை தொடர்பாகவும் சுமந்திரன் பேசினார்.

இதேவேளை, மாவை சேனாதி ராஜாவை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்திய லிங்கம் எம்.பி. மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோரும் இன்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கனடாவின் உறுதிப்பாடு

ஈழத் தமிழர்களின் மிக வலிமையான புலம்பெயர் கட்டமைப்பைக் கொண்ட கனடா தேசம் தன்னளவில் ஒரு பெரிய அரசியல் மாற்றத்திற்குத் தயாராகிக் கொண்டிருக்கின்றது என்பது கண்கூடான விடயம்.

கடந்த ஒரு தசாப்த காலத்துக்கு மேல் கனடாவில் ஆட்சி நடத்தி வரும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தமது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்திருக்கிறார்.

கனடாவின் 45 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் வரும் ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் நடைபெற வேண்டும். அந்தத் தேர்தலோடு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் விபரல் கட்சியின் ஆதிக்கம் முடிவுக்கு வர கனடாவின் கன்சர்வேட்டிவ் கட்சி அதிகாரத்திற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரை காலமும் ஈழத் தமிழர்களுக்காக சர்வதேச மட்டத்தில் கனடா அரசு முன்னணியில் நின்று குரல் கொடுத்து வருகின்ற சூழலில், ட்ரூடோவின் அரசு கவிழ்ந்து, கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சிக்கு வந்தால் நிலைமை என்னாகும் என்று ஒரு பதற்றம் ஈழத் தமிழர்கள் மத்தியில் இருந்து வந்தது என்பது உண்மையே.

ஆனால் நிலைமையை தெளிவுபடுத்தி இருக்கிறார் கன்சர்வேட்டிக் கட்சியின் தலைவரும் கனடாவின் அடுத்த பிரதமராக வரக்கூடியவர் என கருதப்படுபவருமான பியர் பொய்லிவ்ரே.

கனடாவின் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரான பியர் பொய்லிவ்ரே தாம் கனடாவின் அடுத்த பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக ''சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தொடர உலகை வழிநடத்துவேன்'' என்று அறிவித்துள்ளார் என 'தமிழ் கார்டியன்' கடந்த திங்களன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தைப் பொங்கல் மற்றும் தமிழ் பாரம்பரிய மாதத்தைக் குறிக்கும் வகையில் அண்மையில் ரொறன்ரோவில் நடைபெற்ற 'நம்பிக்கையின் அறுவடை' நிகழ்வில் பேசிய பொய்லிவ்ரே, "தமிழ் மக்களைத் துன்புறுத்தியவர்களான ராஜபக்ஷக்கள் மற்றும் பிற குற்றவாளிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றங்களில் வழக்குத் தொடர, கன்சர்வேடிவ் பிரதமர் பியர் பொய்லிவ்ரே உலகை வழிநடத்துவார்.''- என்று அறிவித்திருக்கின்றார்.

''இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து வரும் இனப்படுகொலைகளுக்காக அந்த ஒடுக்கு முறை ஆட்சியைத் தனிமைப்படுத்தவும் தண்டிக்கவும்'' என்ற காரணத்துக்காக 2013 இல் கனடாப் பிரதமராக இருந்த தமது கன்சர்வேடிவ் கட்சியின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கொழும்பில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொதுநலவாய உச்சி மாநாட்டைப் புறக்கணித்தார் என்பதையும் பியர் பொய்லிவ்ரே நினைவுபடுத்தினார்.

தமிழர்களுக்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறலைத் தாங்கள் வலியுறுத்துகின்றனர் என கன்சர்வேடிவ் கட்சித் தலைவர் உறுதியளிப்பது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு, தமிழ் செய்தி நிறுவனங்களுக்கு தகவல் வெளியிட்ட பியர் பொய்லிவ்ரே இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை விரிவுபடுத்துவதாகவும், சர்வதேச அரங்கங்களில், குறிப்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றங்களில் பொறுப்புக்கூறலைப் பின்பற்றச் செய்வார் எனவும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் ஆட்சி மாற்றம் நேர்ந்தாலும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தற்போதைய அரசியல் போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படாது என்பதையே பியர் பொய்லிவ்ரேவின் தற்போதைய கருத்து உறுதிப்படுத்தி நிற்கிறது.



# 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் 5 இளைஞர்கள் கைது!

**(எஸ். நிதர்ஷன்)**

யாழ்ப்பாணத்தில் 40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, ஐந்து இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களிடமும் இருந்து, 40 ஆயிரம் போதை மாத்திரைகளை மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களையும் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






# கோபாலபுரம் சித்த வைத்தியசாலையில் 'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் முன்னெடுப்பு!

(அபு அலா )

"கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத்திட்டத்துக்கு அமைவாக திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் சிரமதானப் பணி இன்று (29) இடம்பெற்றது.

வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பணியில் வைத்திய கலாநிதி எஸ்.ஆர்.போல்டன் ரஜீவ், வைத்தியர் பீ.ராஜவதனா உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் ஈடுபட்டனர்.








# கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தில் கற்பிட்டி பிரதான பாதையின் சிரமதானம்

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத்திட்டத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையால் முன்னெடுக்கப்படும் கற்பிட்டி தொடக்கம் பாலாவி வரையான பிரதான பாதையின் இரு ஓரங்களில் பாரிய சிரமதான வேலைகள் நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கல ராமநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஜே. எம். பைசல், தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் நிமல் பத்திரண, கற்பிட்டி கடற்படைத் தளபதி, கற்பிட்டி , கண்டக்குளி சிவில் பாதுகாப்பு பிரிவினர், நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கற்பிட்டி பிரதேச செயலாளர் உட்பட உத்தியோகத்தர்கள், கற்பிட்டி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள், விளையாட்டு கழக வீரர்கள், நலன் விரும்பிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கற்பிட்டி தொடக்கம் பாலாவி வரையிலான பிரதான வீதியின் இரண்டு பக்கங்களையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் வேலைத் திட்டத்துக்கு நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் இரு குழுக்கள் பிரிக்கப்பட்டு நுரைச்சோலையிலிருந்து பாலாவி வரை வீதியோர சிரமதான பணியை மேற்கொள்வதற்கு ஒரு குழுவும் மற்றைய குழு நுரைச்சோலையில் இருந்து கற்பிட்டி வரை வீதியோர சிரமதான பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# 6 லட்சம் ரூபா வெள்ள நிவாரண உதவிகளை கிழக்குக்கு வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் உள்ள, திருக்கோவில், விநாயகபுரம், உமிரி, திருப்பதி, ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு 6 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருள்கள் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தினை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.



# தொழில் வழிகாட்டல் பயிற்சி







(எம் எப். நவாஸ் )

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சால் நாடளாவிய ரீதியில் 2025 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் மூலம் மூன்றாம் நிலைக் கல்வியை மேம்படுத்தும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டமானது அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாணவர்களை உள்ளடக்கியதாக அட்டாளைச்சேனை ம.ம.வி., ஒலுவில் அல்-ஹம்றா ம.வி. ஆகிய பாடசாலைகளில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜீவகுமார் தலைமையில் நேற்று (28) ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், வளவாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி நெறியில் ஈடுபடும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# ஓய்வூதியப் பிரிவு கல்முனையில் திறப்பு

(ஏ.எல்.றியாஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் பணியாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் வைத்தியர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தை விரைவாக பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஓய்வூதியப் பிரிவொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அரசின் 'கிளீன் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் இந்தப் பிரிவு நேற்று (28) பிராந்திய பணிமனையில் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, தாய் சேய் நலன் பிரிவு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எச்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத், பொது சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல்.எம்.அஜ்வத், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இப்ஹாம், கணக்காளர் உசைனா பாரிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தங்களது ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு இன்னல்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டுவரும் இந்தக் காலத்தில் கல்முனை பிராந்திய பணிமனையில் ஓய்வூதிய பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளமை பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.





# நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதநீர் உற்பத்தி உபகரணம்!

(த.சுபேசன்)

நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஐஸ் பதநீர் உற்பத்தி உபகரணம் திங்கட்கிழமை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவகத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் தலைமையில் இடம்பெற்ற நவீன ஐஸ் பதநீர் உற்பத்தி உபகரண அறிமுக நிகழ்வில் பனை ஆராய்ச்சி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்த அன்ரனி ராஜ் மற்றும் பொறியியலாளர் டிரோன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

புலம்பெயர் தமிழர்களின் "pledge to Restore Foundation" அமைப்பின் நிதிப் பங்களிப்பில் இந்த நவீன உபகரணம் தயாரிக்கப்பட்டு பனை ஆராய்ச்சி நிறுவகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்டுபிடிப்பு தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

புதிய தொழில்நுட்பத்துடன் இணைத்து பதநீர் உற்பத்தி செய்யக் கூடிய உபகரணம் தயாரிக்கப்பட்டு தயாரிப்பு நிறுவனத்தால் எம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதனூடாக அற்ககோல் அற்ற பதநீரைப் பெற முடியும்.

நவீன உபகரணம் ஊடாக பதநீரை உற்பத்தி செய்யும் போது குரங்கு மூலம் ஏற்படுகின்ற தாக்கத்தை குறைக்க முடியும். குரங்குத் தாக்கம் அற்ற இடங்களுக்கும் இதனை அறிமுகம் செய்து பதநீருக்குப் பெறுமதி சேர்க்கத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் குறித்த பதநீருக்கு பெறுமதி சேர்ப்பதன் ஊடாக ஒருவருடம்வரை வைத்துப் பயன்படுத்த முடியும். இதனூடாக நீண்ட காலப் பிரச்சனைக்கு தீர்வு கிடைத்துள்ளது.

பதநீர் குழந்தைகளுக்கு சிறந்த போசாக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. மருத்துவ குணம் நிறைந்தது. குறிப்பாக நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது.

நவீன உபகரணத்தின் உதவியோடு அற்ககோல் அற்ற பதநீரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து சிறந்த வருமானத்தை ஈட்ட முடியும்.

இந்தப் பதநீரானது உற்பத்தியின் போதே ஐஸ் ஜெல் ஊடாக குளிரூட்டப்படக் கூடிய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பனம் தொழிற்துறையைப் பொறுத்தவரை இவ்வாறான முயற்சிகள் மிகக் குறைவு. இந்த முயற்சி நிச்சயமாக வெற்றியளிக்கும். இவர்களுடைய முயற்சிக்கு பனை ஆராய்ச்சி நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கும்.- என்றார்.



# மாற்றுத்திறனாளிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுங்கள்

## ரவிகரன் எம்.பியிடம் மாற்றுத்திறனாளிகள் வலியுறுத்து

(விஜயரத்தினம் சரவணன்)

மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிக கவனம் செலுத்துமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் வீ கேன் மாற்றுத் திறனாளிகள் அமைப்பு வலியுத்தியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட அடம்பன், வேட்டையாமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள வீ கேன் மாற்றுத் திறனாளிகள் வளாகத்துக்கு நேரடியாகச் சென்று மாற்றுத் திறனாளிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போதே குறித்த 'வீ கேன்' மாற்றுத்திறனாளிகள் அமைப்பினர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் மொத்தம் 2,123 மாற்றுத் திறனாளிகள் உள்ளனர். அதில் 98 செவிப்புலனற்ற மாற்றுத் திறனாளிகளும், 309 சிறார் மாற்றுத் திறனாளிகளும் காணப்படுவதாகவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் மொத்தம் 414 மாற்றுத்திறனாளிகள் காணப்படுகின்றனர். அதில் 16 பேர் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். 64 சிறார் மாற்றுத் திறனாளிகளும் காணப்படுகின்றனர். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த நிலையில் இங்குள்ள மாற்றுத் திறனாளிகள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

அந்தவகையில் மாற்றுத் திறனாளிகள் போக்குவரத்து இடர்பாடுகளுக்கு முகங்கொடுப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கான பஸ்களில் இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருந்தும் மாற்றுத் திறனாளிகள் அதில் அமர்ந்து பயணிக்க இடமளிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது.

அத்தோடு மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் போதுமான வாழ்வாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் எனவும் இதன்போது கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதேவேளை, பொது இடங்களில் குறிப்பாக அரச திணைக்களங்களில் கூட மாற்றுத் திறனாளிகளுக்கான அணுகுவசதிகள் இல்லை. செவிப்புலன் அற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான சைகைமொழிபெயர்ப்பாளர் இல்லை. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

விசேடதேவையுடைய மாணவர்களின் முக்கிய தேவைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கடனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பாடசாலை வவுச்சர் திட்டத்தினுள் விசேடகல்வி மாணவர்களை உள்வாங்குதல், பாடசாலைகளில் உள்ள விசேட கல்வி மாணவர்கள் ஒவ்வொருவரதும் இயல்புக்கு ஏற்ப, அவர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைக்கற்றல் செயற்படுகளுக்கான பொருள்கள் வழங்கப்படுதல், ஒவ்வொரு விசேட கல்வி அலகுக்கும் ஆசிரியர் ஒருவருடன் பராமரிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுதல், வங்கிகளில் விசேட தேவையுடைய சிறார்களுக்கு விசேட சேமிப்புக் கணக்குகளைக் கொண்டு வருதல் உள்ளிட்ட கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

இதன்போது விசேட தேவையுடைய மாணவர்களின் முக்கிய தேவைகள் அடங்கிய மகஜரும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் மாற்றுத் திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பிலும், தம்மிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் தாம் கவனம் செலுத்துவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.







# தொழுநோய் விழிப்புணர்வு ஊர்வலம் சாய்ந்தமருதில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சர்வதேச தொழு நோயாளர் தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் தொழு நோய் விழிப்புணர்வு ஊர்வலமும் துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கும் நிகழ்வும் (27) திங்கட்கிழமை இடம்பெற்றன.

சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற இந்தப் பிரதான ஊர்வலம், சாய்ந்த மருது பிரதேச வைத்தியசாலையில் இருந்து பிரதான வீதியூடாகச் சென்று, மாளிகைக்காடு, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் பிரதான வீதியூடாக வந்த வாகனங்களில் பயணித்த பிரயாணிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள், ஸ்டிக்கர் போன்றவையும் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய தொற்று நோய்ப் பிரிவு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சி.எம். பசால் கலந்து கொண்டார்.

இதன்போது வைத்தியசாலைத் தாதிமார்கள், வைத்தியர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# குருக்கள்மடத்தில் பொங்கல் விழா!

(வி.ரி.சகாதேவராஜா)

களுவாஞ்சிக்குடி மண்முனை தென்எருவில்பற்று பிரதேச செயலகத்தின் மிகவும் பிரமாண்டமான தைப்பொங்கல் பெருவிழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் மூன்று கட்டங்களாக கோலாகலமாக இந்தவிழா பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.

கலாசார விழுமியங்களுடன் பண்பாட்டு பவனியாக கொண்டுவரப்பட்ட நெற்கதிர்கள் ஸ்ரீலஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, சமய வழிபாடுகளுடன் பாரம்பரிய முறையில் உப்பட்டி அடித்து பொலி தூற்றப்பட்டு பின்னர் நெல் குற்றப்பட்டு பொங்கல் பானையில் புத்தரிசியிடப்பட்டு நிகழ்வுகள் இனிதே இடம்பெற்றன.















# முன்பள்ளிச் செல்நெறிகள் நூல் அறிமுக நிகழ்வுகள்



(த.சுபேசன்)

இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் "21ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்" என்ற நூல் அறிமுக நிகழ்வு உசன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

உசன் இராமநாதன் முன்பள்ளியின் ஆண்டு விழா மற்றும் கால்கோள் நிகழ்வில் இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளரும் நூலின் பதிப்பாசிரியருமான ந.சச்சிதானந்தன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த நிலையிலேயே அவர் மேற்படி நூலை முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத்தலைவர் இ.சுரேனிடம் வழங்கி அறிமுகம் செய்து வைத்திருந்தார்.

அத்துடன் இதன்போது சபையில் இருந்த அனைவருக்கும் இலவசமாக பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நூலானது தேசிய மட்டத்திலான முன்பிள்ளைப் பருவ கொள்கை உருவாக்கம் மற்றும் நடைமுறை, பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு, வடமாகாண முன்பள்ளித்துறையின் இன்றைய நிலை,முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பிலான அடிப்படை தொழில் சட்டங்கள், வாய்மொழி மூல ஆங்கிலப் பயன்பாட்டை வலுப்படுத்தல், எதிர்கால மனித மூலதனமும் பொருளாதார நெருக்கடியும், முன்பிள்ளைப் பருவ விருத்திச் செயற்பாடுகள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் கல்வியும் நவீன தொழில்நுட்பமும் எனப் பல ஆக்கங் களை உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# மாற்றுத் திறனாளிகளை தொழில் வழங்கல் திட்டத்தின் கீழ் விருது வழங்கும் நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

மாற்றுத் திறனாளிகளைத் தொழிலில் இணைத்தல் திட்டத்தின் கீழ் விருது வழங்கும் நிகழ்வு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நேற்று (28) இடம்பெற்றது.

குறித்த திட்டத்தினை சமூக சேவைகள் திணைக்களம், மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் ஜப்பானிய நிதி நிறுவனமான ஜெயிக்கா ஆகியன இணைந்து மாற்றுத் திறனாளிகளை தொழிலில் இணைத்தல் எனும் திட்டத்தின் கீழ் வெற்றிகரமான திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.



திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ.ஜீ.எம். ஹேமந்த குமார தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாற்றுத் திறனாளிகளை தொழிலில் உள்வாங்கி அவர்களுக்கான வாழ்வாதாரத்தை தாங்களே அமைத்து கொள்ளும் நோக்கமாக இந்தத் திட்டம் காணப்படுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 2024 ஆம் ஆண்டுக்காக சுமார் 17 மாற்றுத் திறனாளிகள் தொழிலில் இணைத்து கொள்ளப்பட்டு தற்போது உரிய பயனாளிகள் குறித்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், வெற்றிகரமாக தெரிவான மாற்றுத் திறனாளிகள், தொழில் வழங்குநர்கள், பிரதேச செயலக சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மனித வள அபிவிருத்தி உத்திதோகத்தர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், துறை சார் உத்தியோகத்தர்கள், தொழில் வழங்குநர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# மகா கும்பமேளா நெரிசலில் சிக்கி 15 பேர் உயிரிழப்பு; பலர் காயம்!

வட இந்தியாவில் இன்று மவுனி அமாவாசை என்பதால் உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மகா கும்ப மேளாவில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட அதிகளவில் பக்தர்கள் திரண்டிருந்த நிலையில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இதனால், உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர் என அங்கு சிகிச்சையில் ஈடுபட்டுள்ள மருத்துவர் ஒருவர் கூறியுள்ளார்.

மேலும், இந்த கூட்ட நெரிசலில் சிக்கி பலரும் காயமடைந்துள்ளனர். காயம் குறித்து மட்டுமே அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். உயிரிழப்புகள் அதிகாரபூர்வமாக இன்னும் அறிவிக்கப்படாத நிலையில், மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் உத்தர பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்ய நாத்திடம் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் தொலைபேசியில் நில வரம் குறித்து விசாரித்தனர். பிரதமர் மட்டும் ஒரு மணி நேரத்துக்குள் இரண்டு முறை யோகி ஆதித்யநாத்திடம் தொலைபேசியில் பேசியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# 11 மணிக்கு பிறகு திரையரங்கில் படம் பார்க்க அனுமதியில்லை

## நீதிமன்றம் உத்தரவு



தெலுங்கானா மாநிலத்தில் உள்ள ஒரு திரையரங்கில் கடந்த டிசம்பர் மாதம் அதிகாலை நேரம் நடிகர் அல்லு அர்ஜூன் நடித்த 'புஷ்பா 2' படத்தின் சிறப்பு காட்சி திரையிடப்பட்டது. அப்போது அங்கு ரசிகர்களுடன் சேர்ந்து படம் பார்க்க வந்திருந்த அல்லு அர்ஜூனை பார்க்க பெருமளவு கூட்டம் கூடியது.

இதில் ரேவதி என்ற பெண் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தார். அவருடன் வந்திருந்த 8 வயது மகன் படுகாயம் அடைந்தான். இந்த சம்பவம் தொடர்பாக நடிகர் அல்லு அர்ஜூன் கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. பின்னர் அல்லு அர்ஜூன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதைத்தொடர்ந்து திரைப்பட டிக்கெட் விலை உயர்வு மற்றும் சிறப்பு காட்சிகளுக்கான அனுமதி தொடர்பாக தெலுங்கானா ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இம்மனு நேற்று முன்தினம் நீதிபதி விஜய்சென் ரெட்டி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதி, 16 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை காலை 11 மணிக்கு முன்பாகவோ இரவு 11 மணிக்கு பிறகோ இரவு, அதிகாலை காட்சிகளில் திரையரங்கிற்குள் அனுமதிக்க கூடாது என திரையரங்க உரிமையாளர்களுக்கும், தெலுங்கானா மாநில அரசுக்கும் உத்தரவிட்டார்.

மேலும் குழந்தைகள் திரையரங்குகளில் நுழைவதை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு தெலுங்கானா மாநில அரசை ஐகோர்ட்டு கேட்டுக்கொண்டது.

இந்த நேரங்களில் குழந்தைகள் திரைப்படங்களை பார்ப்பதற்கான விதிகளை உருவாக்க குழந்தை உளவியலாளர்கள் உள்ளிட்ட நிபுணர்களை கலந்தாலோசிக்குமாறு அரசுக்கு அறிவுறுத்தப்பட்டது. "இந்த உத்தரவு இப்போது அமுலுக்கு வந்துள்ளது. பொழுதுபோக்கு துறையின் தேவைகளை சமநிலைப்படுத்தும் அதே வேளையில், குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான வழிகாட்டுதல்களை அரசாங்கம் விரைவில் உருவாக்கும் என கருத்து தெரிவித்த நீதிபதி வழக்கை அடுத்த மாதம் 22 ஆம் திகதி வரை ஒத்தி வைத்துள்ளார்.

# 100 ஆவது ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி இஸ்ரோ சாதனை!

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ இன்று தனது 100 ஆவது ரொக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

ஜி.எஸ்.எல்.வி-எப்15 எனப் பெயரிடப்பட்டுள்ள ரொக்கெட்டை இஸ்ரோ விண்ணில் செலுத்தியுள்ளது. இந்த ரொக்கெட் மூலம் என்.வி.எஸ்-02 என்ற செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைக்கோள் இன்று காலை 6.23 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இஸ்ரோ மையத்தில் இருந்து ஏவப்பட்டுள்ளது.

என்.வி.எஸ்-02 செயற்கைக்கோள் தரை, கடல், வான்வெளி போக்குவரத்தை கண்காணித்து, பேரிடர் காலங்களில் துல்லியமான தகவலை தெரிவிக்கும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது.







# 176 பயணிகளுடன் சென்ற விமானத்தில் தீப்பிடித்தது

தென் கொரியாவில் 176 பயணிகளுடன் சென்ற விமானம் தீப்பிடித்ததுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிம்ஹே விமான நிலையத்தில் பயணிகள் விமானம் ஒன்றே இவ்வாறு தீப்பிடித்ததுள்ளது.

எனினும், பயணிகள் 176 பேரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேற்படி விமானத்தில் 169 பயணிகள் மற்றும் ஏழு பணியாளர்கள் பயணித்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அமெரிக்க இராணுவத்தை மறுசீரமைப்பதற்கான நிறைவேற்று உத்தரவுகளில் ட்ரம்ப் கையொப்பம்



அமெரிக்க இராணுவத்தை மறுசீரமைப்பதற்கான நிறைவேற்று உத்தரவுகளில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று கையொப்பமிட்டார்.

நாஜி ஆட்சியிலிருந்து அவுஷ்விட்ஸ் கைதிகள் முகாம் விடுவிக்கப்பட்டு 80 ஆவது ஆண்டு நிறைவை குறிக்கும் வகையில் போலந்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு டொனால்ட் ட்ரம்ப் இவற்றில் கையொப்பமிட்டுள்ளார்.

இதனிடையே, கொரோனோ தடுப்பூசியைப் பெற மறுத்தமைக்காக இராணுவத்திலிருந்து அகற்றப்பட்ட எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களை டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் பணியில் இணைத்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்தின் ஆயுதப் படைகளின் பன்முகத்தன்மை மற்றும் சமத்துவத்தைப் பாதுகாக்க டொனால்ட் ட்ரம்ப் பல இராணுவ சட்டங்களையும் சீரமைத்துள்ளமை சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ளது.





# 120 நாள்கள் நீருக்கடியில் வாழ்ந்து உலக சாதனை

ஜெர்மனியை சேர்ந்த ருடிகர் கோச் என்ற நபர் , 120 நாள்கள் நீருக்கடியில் வாழ்ந்து, நீருக்கடியில் நீண்ட காலம் வாழ்ந்தவர் என்ற உலக சாதனை படைத்துள்ளார்.

59 வயதான குறித்த நபர், பனாமா கடலுக்குள் 30 சதுர மீட்டர் கொண்ட காப்ஸ்யூல் பாணியில் உருவாக்கப்பட்ட வீட்டில் கடந்த 120 நாள்களாக வசித்து வந்துள்ளார்.

முன்னதாக, புளோரிடா குளத்தில் நீருக்கடியில் பல்கலைக்கழக பேராசிரியரான ஜோசப் டிதுரி என்பவர் 100 நாள்கள் தங்கியிருந்தார்.

அந்த சாதனையை முறியடித்து ருடிகர் கோச் கின்னஸ் சாதனையில் இடம் பிடித்துள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

புதன்கிழமை 29/01/2025

## பலத்த காற்று தொடர்பில் ரொறன்ரோவில் எச்சரிக்கை

கனடாவின் பலத்த காற்று மற்றும் சீரற்ற காலநிலை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் மாலை வேளையில் இவ்வாறு 02▶

# கனடா பிரதமர் பதவிக்கு போட்டியிட்ட சந்திரா ஆர்யாவுக்கு அனுமதி மறுப்பு



**கனடா பிரதமர் பதவிக்கு போட்டியிட, தனக்கு ட்ரூடோவின் லேபர் கட்சி அனுமதி மறுத்து விட்டதாக இந்திய வம்சாவளியினரான நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ள செய்தி மக்களை கோபமடையச் செய்துள்ளது.**

**கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ தனது பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, தான் கனடா பிரதமர் பதவிக்காக போட்டியிட இருப்பதாக இந்திய வம்சாவளியினரான சந்திரா ஆர்யா தெரிவித்திருந்தார்.**

2015 ஆம் ஆண்டு முதல் கனடாவில் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள ஆர்யா, இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலுள்ள தும்கூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

இந்நிலையில், திடீரென ஆர்யா சமூக ஊடகமான எக்ஸில் வெளியிட்டுள்ள செய்தி ஒன்று மக்களை கோபமடையச் செய்துள்ளது.

ஜஸ்டின் ட்ரூடோவின் லேபர் கட்சி, கனடா பிரதமர் பதவிக்கு போட்டியிட, தனக்கு அனுமதி மறுத்துவிட்டதாக ஆர்யா தெரிவித்துள்ளார்.

எதனால் ஆர்யாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்பது குறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகாத நிலையில், ஆர்யாவை போட்டியிட விடாமல் தடுப்பது ஜனநாயகத்துக்கு எதிரானது என கனேடிய மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

நீங்கள் கனடா பிரதமர் பதவிக்கு போட்டியிடக்கூடாதென்றால், உங்களை எதற்காக நாடாளுமன்ற உறுப்பினராக மட்டும் அனுமதித்தார் என கேள்வி எழுப்பியுள்ளார் ஒருவர்.

மற்றொருவரோ, இவர்கள் தேர்ந்தெடுக்கவே படாத ஒரு வங்கியாளரை பிரதமருக்கான போட்டியில் அனுமதிப்பார்கள், ஆனால், அதே கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் ஒருவரை அனுமதிக்கமாட்டார்களா என்று கேட்கிறார் ஒருவர்.

கனடா வரலாற்றிலேயே ஜனநாயகத்துக்கு எதிரான கட்சி என்றால் அது லிபரல் கட்சிதான் என்றும் ஒருவர் தெரிவித்துள்ளார்.



# அமெரிக்க உணவு பொருள்களை புறக்கணிக்குமாறு கனடா கோரிக்கை

அமெரிக்கா உணவு பொருள்களை புறக்கணிக்குமாறு கனடிய நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்கா அரசாங்கம் கனடியை ஏற்றுமதிகளுக்கு வரி விதிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு விடுக்கப்பட்ட எச்சரிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடிய நுகர்வோர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

அமெரிக்கா உணவு பொருள்களை கொள்வனவு செய்யும் 02▶




# வியாபார நிலையம் ஒன்றின் மீது இரண்டு தடவைகள் துப்பாக்கி சூடு

கனடாவின் அமைந்துள்ள வியாபார நிலையம் ஒன்றின் மீது இரண்டு தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. விட்பி பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் தர்ஹம் பிராந்திய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் வாகனம் ஒன்றில் சென்று வர்த்தக நிலையம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பிச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி வர்த்தக நிலையத்தின் மீது கடந்த 22 ஆம் திகதியும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த பகுதியில் இருந்து துப்பாக்கித் தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன. சி.சி.டி.வி. காணொளி பதிவுகள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால் 888-579-1520, ext. 1905 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

## அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாடிக்கையாளர்கள் ஒரு தடவைக்கு இரண்டு தடவை அவற்றை கொள்வனவு செய்வது குறித்து யோசிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்வேறு உணவு பண்டங்களின் புகைப்படங்கள் சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டு அவற்றை புறக்கணிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் முதலாக திகதி தொடக்கம் கனடிய ஏற்றுமதிகள் மீது 25 வீத வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

எவ்வாறெனினும், அமெரிக்க உற்பத்திகளை அடையாளம் கண்டு அவற்றை புறக்கணிப்பது என்பது பல்வேறு நடைமுறை சிக்கல்களை கொண்ட செயல்முறை என துறை சார்ந்த நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



## பலத்த காற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலத்த காற்று வீசும் எனவும் பனிப்பொழிவு நிலவும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும் பெரும்பாக பகுதியிலும் தென் ஒன்றாரியோ பிராந்தியத்திலும் கடுமையான குளிருடனான வானிலை நிலவும் என எதிர்ப்பு கூறப்பட்டுள்ளது.

பலத்த காற்று காரணமாக சுவிட்சர்லாந்து கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எதிர்வுகூறல்களை வெளியிட்டுள்ளது.

போக்குவரத்திற்கும் பாதிப்புகளை ஏற்பட கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் இரவு சில சென்டிமீட்டர் அளவில் பனிப்பொழிவு ஏற்படும் எனவும் நேற்றைய தினமும் இந்த நிலைமை காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# ஒன்றாரியோவில் விமான நிலையம் அமைக்கப்படவிருந்த இடத்தில் பூங்கா



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் பீக்கரின் பகுதியில் விமான நிலையம் அமைக்கப்படாது என மத்திய அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக மேற்படி பகுதியில் விமான நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து அடிக்கடி பேசப்பட்டு வந்தது.

இதற்காக மத்திய அரசாங்கம் பாரியளவு காணியை ஒதுக்கீடு செய்திருந்தது, தற்பொழுது அந்த காணியை பூங்காக்கள் அமைப்பதற்கு பயன்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1972 ஆம் ஆண்டு விமான நிலையம் அமைக்கும் நோக்கில் டொரன்டோவிற்கு வடகிழக்கு பகுதியில் காணி ஒதுக்கப்பட்டது.

அதன் பின்னர் ஆட்சி பொறுப்பினை ஏற்றுக் கொண்ட அரசாங்கங்கள் இந்த விமான நிலையம் அமைப்பது தொடர்பில் காலத்திற்கு காலம் வாத பிரதிவாதங்களை மேற்கொண்டிருந்த போதிலும் விமான நிலையம் அமைக்கப்படவில்லை.

இவ்வாறான ஓர் பின்னணியில் மேற்படி காணியில் விமான நிலையம் அமைக்கப் போவதில்லை என போக்குவரத்து அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இந்த விமான நிலையம் அமைப்பதற்காக கனடிய போக்குவரத்து முகவர் நிறுவனம் சுமார் 8700 ஏக்கர் காணியை ஒதுக்கி வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பூங்காக்களை அமைப்பது தொடர்பில் பொதுமக்கள் மற்றும் பழங்குடியின சமூகத்தினருடன் கலந்தாலோசனை செய்ய உள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரம்டனில் எரிபொருள் நிரப்பு நிலைய கொள்ளை தொடர்பில் ஒருவர் கைது

பிரம்டனில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேகத்தில் நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றும் ஒரு நபருக்கு பொலிஸார் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி இரண்டு ஆண்கள் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை கொள்ளையிட்டுள்ளனர்.

ஹுரான்டாரியோ மற்றும் போகியார் வீதிகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள எரிபொருள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

போலியான துப்பாக்கி ஒன்றை



பயன்படுத்தி மேற்படி நபர்கள் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இந்த சம்பவத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 30 வயதான பிரம்டனை சேர்ந்த ஜட்டார் சிங் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி நபருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 30 வயதான ட்ரான் ஜோர்ட் சிங் என்ற சந்தேக நபரை பொலிஸார் தேடி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

போலி ஆயுதம் ஒன்றை காண்பித்து கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என மேற்படி நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.